<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்</u>

**முன்னிலை: திருமதி. சாதத்துணிஷா, பி.ஏ. பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11ம் நாள் புதன் கிழமை

**<u>Crlmp.No. 337/2025 IN STC.No. 108/2022</u>**

சாலை மேதினி ..... மனுதாரர்/புகார்தாரர்

... எதிர் ...

சாலை மாதவன் ..... எதிர்மனுதாரர்/எதிரி

இம்மனுவானது என் முன்பாக 05.02.2026–ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.பாபு அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. M. சந்திரஜோதி, அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் பு.த.சா PW3 ஐ எதிரி வங்கியான Punjab National Bank, நந்திக்கோவில் திருச்சி–1, அன்னவாசல் கிளை AXIS வங்கி–2, அன்னவாசல் கிளை KVB வங்கி–3 அழைத்து விசாரணை செய்ய உத்தரவிட தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் :–</u>**

மனுதாரர்/புகார்தாரர் தனது மனுவில், மேற்கண்ட வழக்கில் ஏற்கனவே புகார்தாரர் தரப்பில் பு.த.சா 1 முதல் 4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர் என்றும், பு.த.சா 3 ஆன எதிரி வங்கியில் மேலாளரிடம்

வழக்கு காசோலை தொடர்பான முக்கிய வினா கேட்காமல் விடுபட்டு போனது என்றும், மேற்படி விபரம் வழக்கு வழக்கு கோப்புகளை ஆய்வு செய்த போது தற்போதுதான் தெரியவந்துள்ளது என்றும், மேற்படி தவறுகை வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே இந்த வங்கி மேலாளர் PW 3 ஐ மீண்டும் அழைத்து விசாரிப்பது அவசியமாக உள்ளது என்றும், மேலும் எதிரி புகார்தாரரின் சகோதரர் பெயரில் பணம் செலுத்தியதாக அன்னவாசல் கிளை AXIS வங்கி மற்றும் அன்னவாசல் கிளை KVB வங்கி என்றும், பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார் என்றும், எனவே வங்கி மேலாளர்களையும் விசாரிக்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், எனவே பு.த.சா PW3 ஐ எதிரி வங்கியான Punjab National Bank, நந்திக்கோவில் திருச்சி–1, அன்னவாசல் கிளை AXIS வங்கி–2, அன்னவாசல் கிளை KVB வங்கி–3 அழைத்து விசாரணை செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்த எதிருரை :–

மனுதாரர்/புகார்தாரர் தாக்கல் செய்துள்ள மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடிய அருகதை உடையதாகும் என்றும், எதிர்மனுதாரர்/எதிரியின் வங்கி கணக்கு வைத்துள்ள பு.த.சா 3 வங்கி மேலாளரை மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் ஏற்கனவே விசாரணை செய்து விட்டார்கள் என்றும், வழக்கினை திசை திருப்ப வேண்டும் என்ற காரணத்திற்காக புகார்தாரர் இந்த பொய்யான மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே மனுதாரர்/புகார்தாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை எதிரியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்.

**4. பிரச்சனைக்கான தீர்வு**

1) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் அ.சா.3 (PW 3) இடம் வழக்கு காசோலை தொடர்பான முக்கிய வினா கேட்காமல் விடுபட்டு போனதால், PW 3 ஐ மீண்டும் அழைத்து விசாரிப்பது அவசியமாக உள்ளது என்றும், மேலும் எதிரி புகார்தாரரின் சகோதரர் பெயரில் பணம் செலுத்தியதாக அன்னவாசல் கிளை AXIS வங்கி மற்றும் அன்னவாசல் கிளை KVB வங்கி என்றும் பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார் என்றும், எனவே வங்கி மேலாளர்களையும் விசாரிக்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்/எதிரி தரப்பில் பு.த.சா 3 வங்கி மேலாளரை மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் ஏற்கனவே விசாரணை செய்து விட்டார்கள் என்றும், வழக்கினை திசை திருப்ப வேண்டும் என்ற காரணத்திற்காக புகார்தாரர் இந்த பொய்யான மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும் எதிர்வாதம் செய்துள்ளார்.

3)இதனைக் குறித்து பரிசீலனை செய்ததில், மேற்படி எதிர்மனுதாரர்/எதிரி தரப்பில் இம்மனுவை அனுமதிக்க ஆட்சேபணை தெரிவித்துள்ள போதிலும், மேலும், மனுதாரர்/புகார்தாரர் மனுவில் கூறியுள்ள காரணங்களை கருத்தில் கொண்டும், மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் விதமாக இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுவதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரர்/புகார்தாரர் செலவு தொகையாக ரூ. 500/– பு.த.சா3 (PW 3)க்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி

செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11–ம் நாள் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.02.11 16:40:23 +0530

ஒம்/சாதத்துனிஷா

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

மனுதாரர்/புகார்தாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர்/எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.